# இயற்கைக்கு மேம்பட்டவைகள்

## 6



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# என்ன சம்பவித்தாலும் காரியமில்லை, தேவனுடைய வாக்குத்தத்தத்தையே நோக்கிப் பாருங்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

44. மேலும் அதன்பிறகு, தேவன் அங்கே ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார் என்பதை நாம் கண்டு கொள்கிறோம், ஆபிரகாமோடு மட்டுமல்ல, ஆனால் அவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியோடும் தேவன் உடன்படிக்கை பண்ணினார். இன்று

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாயிருக்கிற, கிறிஸ்தவர்களாகிய நாம் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறோம் என்பதை நாம் காண்கிறோம். மேலும் அந்த வாக்குத்தத்தமானது ஆபிரகாமோடு இருந்தது போல அவ்வளவு நிச்சயமாய் நம்மோடும் இருக்கிறது.

45. இப்பொழுது, நாம் அவ்விதமாக ஆபிகாமின் சந்ததியாராய் இருப்போமானால், நாம் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், இல்லாதவைகளை

இருக்கிறவைகள் போல அழைத்தான், ஏனெனில் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். அது அற்புதமாயில்லையா? அவன் மருத்துவரிடம் சென்றிருந்தால் என்னவாகியிருக்கும்? இருதயக் கோளாறு தான் முதல் முக்கியமான சாகடிப்பவனாக (number one killer) இருக்கிறான். மருத்துவர், "சீமாட்டியே, நான் உன்னிடம் சொல்வதற்கு வருந்துகிறேன், ஆனால் உன்னுடைய இருயதம் (செயலிழந்து) போய் விட்டதாக இருதயத் துடிப்பை அளக்கும் கருவி பதிவு செய்த வரைபடம் (cardiogram) கூறுகிறது, நீ முடிந்து

விட்டாய்!" என்று சொல்லுவாரானால், என்னவாக இருக்கும்.

46. அதைச் செய்வதற்குத்தான் எல்லா மனிதரும் அறிந்திருக்கிறார்கள். அவன் அதை நோக்கிப் பார்க்கிறான், அங்கே இருதயத் துடிப்பை அளக்கும் கருவி பதிவு செய்த ஒரு வரைபடம் (cardiogram) இருக்கிறது, அது அதை நிரூபிக்கிறது, அப்படியானால் நீங்கள் போய் விட்டீர்கள். அது மருத்துவ விஞ்ஞானத்தின்படியானதாகும், அவ்வளவு தான் செய்ய முடியும். ஆனால் இப்பொழுது, இன்னும், அங்கேயிருக்கும் வழக்கத்துக்கு மாறாகத் துடித்துக் கொண்டிருக்கிற

இருதயத்தில் அப்படியே ஏதோவொன்று உள்ளது (நீங்கள் வார்த்தையை வாசிக்கத் ஆரம்பிக்கிறீர்கள், அல்லது கிறிஸ்து அருகில் இருக்கிறார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்கிற ஏதோவொன்று சம்பவிக்கிறது) மேலும் உங்களுடைய இருதயத்தில், நீங்கள் சுகமடையப் போகிறீர்கள் என்ற வாக்குத்தத்தத்தை தேவன் உங்களுக்குக் கொடுப்பதை நீங்கள் உணருகிறீர்கள். நீங்கள் மரிக்கப் போகிறீர்கள் என்று உங்களிடம் கூறும்படிக்கு மருத்துவர் எந்த நல்ல காரியத்தையும் செய்திருக்க மாட்டாரா? ஏனெனில் நீங்கள்

சுகடையப் போகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

47. சமீபத்தில், அதைப் போன்ற நோயாளியிடம் – ஒரு வயதான மனிதனால் நான் அழைக்கப்பட்டேன். மேலும் அவனுடைய பையன்... ஓ, நான், "சமீபத்தில்" என்றேன், அது ஏறக்குறைய ஆறு, ஏழு மாதங்களுக்கு முன் சம்பவித்தது. அந்தப் பையன் துயர் நிறைந்த தொண்டை அழற்சி நோயின் (black diphtheria) (இது தொண்டை அடைப்பான் நோயாகும். இந்நோய்க் கிருமிகள் தொண்டையில் தொற்றிப் பின்னர் வெண் நிற திசு அதில் படர்கிறது.

இதனால் தொண்டை வீக்கமும், வேதனையும், மூச்சு விடுவதில் இடர்பாடும் ஏற்படுகிறது. இந்நோய்க் கிருமிகள் ஏற்படுத்தும் நச்சுத்தன்மை நரம்பு மண்டலத்தையும், இருதயத்தையும் பாதிக்கக்கூடியது. மேலும் இது தொற்று நோய் வகையைச் சேர்ந்தது – மொழிபெயர்ப்பாளர்.) காரணமாக மரித்துக் கொண்டிருந்தான். ஆகவே, நான் அந்த வாலிப பையனுக்காக ஜெபிக்கும்படிக்குப் போனான். அந்த வயதான தகப்பனார் சொன்னார் - அவர் ஒரு அருமையான வயதான மனிதர் - அவர், “சகோதரன் பிரன்ஹாமே, என்னுடைய

மகனுக்காக ஜெபிக்கும்படி நீர் வருவீரா?” என்று கேட்டார்.

நான், “நல்லது, ஐயா, சரி, நான் அங்கே போக முடியும் என்று ஊகிக்கிறேன்” என்றேன். ஆகவே, சரியாக அந்நேரத்தில் எந்த ஆராதனையும் இல்லாதிருந்தது. ஆகவே, நான் ஜெபிக்கும்படி போனேன்.

48. மருத்துவர் கதவண்டை என்னை சந்தித்து, அவர், “இப்பொழுது, ஒரு நிமிடம்” என்றார். அவர், “உங்களால் அங்கே உள்ளே போக முடியாது. அந்தப் பையனுக்கு தொண்டை அழற்சி நோயுள்ளது, எப்படியாயினும் அது

எந்த நன்மையும் செய்யாது. இங்கே வெளியிலிருந்து உங்களுடைய ஜெபத்தைச் செய்யுங்கள், அது என்னவாயிருந்தாலும், ஏனெனில் உங்களால் போக முடியாது...” என்றார்.

நான், “நான் அவன் மேல் என்னுடைய கரங்களை வைக்க விரும்புகிறேன்” என்றேன்.

அவர், “நல்லது, நீர் ஒரு தகப்பனார், உமக்கு பிள்ளைகள் உண்டு. நீர் அந்தத் தொண்டை அழற்சி நோயைப் பெற்றுக் கொள்வீர்; நீர் அங்கே உள்ளே போகக் கூடாது” என்றார்.

49. நான் சொன்னேன்... (அவர் ஒரு கத்தோலிக்கராக இருந்தார் என்பதைப் புரிந்து கொண்டேன், நான், "ஐயா, அந்தப் பையன் கத்தோலிக்கனாய் இருந்து, இங்கே பாதிரியார் இறுதிச் சடங்குகளை செய்யும்படியாக இருந்தால், நீர் அவரைப் போக அனுமதிப்பீரா?" என்றேன்.

அவரோ, "அது வித்தியாசமானது" என்றார்.

நான், "இல்லை, அதுவல்ல, இல்லை, அதுவல்ல" என்றேன். நான் சொன்னேன்...

அவர், “ஆனால் பாதிரியார் விவாகமாகாத மனிதர், அவருக்குப் பிள்ளைகள் கிடையாது” என்றார்.

50. நான், “நான் அதைக் குறித்து பொறுப்பெடுத்துக் கொள்ள விரும்புகிறேன். நான் அதை என்னுடைய பிள்ளையிடம் கொண்டு செல்ல பயப்படுவேனானால், நான் ஏன் அவனுக்காக ஜெபிக்கப் போவேன்? உள்ளே போய் அவனுக்காக ஜெபித்தால், எனக்கு எந்த நன்மையையும் செய்யாதா? நீர் சற்று அனுமதிப்பீரானால்...” என்றேன்.

51. இறுதியாக, நாங்கள் அதைக் குறித்து அவரிடம் பேசினோம். ஒரு

முக்காட்டையும், மற்ற ஒவ்வொன்றையும் நான் அணிந்து கொள்ளும்படி அவர் செய்தார், என்னுடைய முகத்தை நான் கழுவும்படி செய்தார், என்னுடைய முகத்தின் மேல் எதையோ பொருத்தினார், மற்றும் எல்லாவற்றையும் செய்தார்... என்னே, அங்கே அதனூடாக என்ன சம்பவித்துக் கொண்டிருந்தது என்பது எனக்குத் தெரியாதது போன்று எனக்குக் காணப்பட்டது. அந்த வயதான தகப்பனாரும் தாயாரும் படுக்கையின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள், செவிலி என்னை உள்ளே அழைத்துச் சென்றாள், நான் உள்ளே

போகலாம் என்று மருத்துவர் தம்முடைய தலையை அசைத்தார்.

ஆகவே, உள்ளே சென்றேன், அந்த வயதான தகப்பனார் நோக்கிப்பார்த்தார், அவர், "மகனே, என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா?" என்று கேட்டார்.

செவிலியோ, "ஏன், ஐயா, நேற்று முதல் அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. அவன் மரித்துக் கொண்டிருக்கிறான்" என்றாள்.

நான், "நல்லது, நாம் ஜெபிப்போம்" என்றேன். நான் முழங்கால்படியிட்டு அந்த சிறு பையனுக்காக ஜெபிக்க ஆரம்பித்தேன்; தரிசனமோ அல்லது

எதுவுமோ கிடைக்கவில்லை, வெறுமனே ஜெபித்தோம்.

52. மேலும் நான், "பரலோகப் பிதாவே, விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்று நீர் வாக்குப்பண்ணியுள்ளீர், நான் என்னுடைய முழு இருதயத்தோடும் உம்மிடம் உத்தமமாக ஜெபத்தை ஏறெடுத்துக் கொண்டிருக்கிறேன், என்னுடைய இருதயத்தில் இருக்கிற எளிமையோடு நான் செய்யும்படியாக அறிந்த எல்லாவற்றோடும் இந்த பையனுடைய ஜீவனுக்காக கேட்கிறேன். இதைப் போன்ற ஒரு வாலிப பையனை நீர் ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்?

பிதாவே, நான் இதைப் புரிந்து கொள்ளவில்லை, ஆனால் நீர் அது சம்பந்தமாக எதையாவது என்னிடம் காண்பிக்க விரும்பினால், நான் அவனுடைய தகப்பனைக் கட்டாயமாகத் தேற்றுவேன். ஏன், இதோ பாரும், உம்முடைய ஊழியன் இங்கே நின்று கொண்டிருக்கிறேன், ஆனால் நீர் இந்தப் பையனுடைய ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன்; அவன் வளருவதற்கு அப்படிப்பட்ட ஒரு அருமையான வீட்டைப் பெற்றிருக்கிறாள், கிறிஸ்தவ தகப்பனாரும் தாயாரும் அவனுக்கு இருக்கிறார்கள், அவர்கள் வாக்குத்தத்தத்தை

கெஞ்சிக் கேட்கிறார்கள்" என்றேன். எனக்குத் தரிசனம் கிடைக்கவில்லை, நான் எழுந்து, "நல்லது, கர்த்தாவே, இதை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன்" என்றேன்.

53. அந்த வயதான தகப்பனார் எழுந்து, தாயாரை நோக்கிப் பார்த்து, "ஓ, தாயாரே, இது அற்புதம் அல்லவா?" என்றார். முடிந்து விட்டது, முடிந்து விட்டது, உங்களுக்குத் தெரியும், அவருக்கு சிரத்தை உள்ள காலம் வரை. மேலும் அவர், "ஓ, நான் மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன், சகோதரன் பிரன்ஹாமே, கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நீர் விசுவாச ஜெபத்தை

ஏறெடுத்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய பையன் இப்பொழுது சுகமடைந்து விட்டான்" என்றார்.

54. அந்த சிறு செவிலி அவனை வினோதமாக நோக்கிப் பார்த்தாள், அவனோ, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்றான். அவனுடைய கன்னங்கள் வழியாக அப்படியே கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது, மேலும் அந்த வயதான தாயார்... அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கரங்களைப் போட்டுக் கொண்டு, ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டே, "ஓ கர்த்தாவே, எங்களுடைய பையனை நீர் சுகமாக்கினதற்காக நாங்கள்

உமக்கு நன்றி செலுத்துகிறோம்" என்றார்கள். வெளிப்படையாக அவருடைய இருதயம் அசைக்கப்பட்டது.

ஆகவே அந்த சிறு தாதி, "ஐயா, நீர் எப்படி அந்தவிதமாக நடந்து கொள்ளலாம், உங்களுடைய பிள்ளை மரித்துக் கொண்டிருக்கிறானே?" என்றாள்.

55. அவர், "ஓ, மேடம், அவர் மரித்தவராயில்லை, அவர் ஜீவிக்கிறார்" என்றார். மேலும் அவர், "ஏன், சீமாட்டியே, ஓ, நான்... உனக்குப் புரியவில்லை" என்றார்.

56. அவள், "நல்லது, இதயத் துடிப்பை அளக்கும் கருவி பதிவு

செய்த இந்த வரைபடத்தைப் பாரும், ஐயா...” என்றாள். எப்பொழுதாவது அது... எனக்குத் தெரியவில்லை, ஆனால், “அது எல்லாவிதத்திலும் தொய்வடைந்த நிலையில் இருக்கும் போது, இருதயம் மீண்டும் எப்பொழுதாவது பழைய நிலைக்குத் திரும்புவது என்பது மருத்துவ வரலாற்றிலேயே அறியப்பட்டிராததாகும். பையன் மரித்துக் கொண்டிருக்கிறான், இன்னும் ஒரு சில மணி நேரங்களில் அவன் மரித்து விடுவான். அவன் அப்படியே பெரும்பாலும்... இப்பொழுது, அவன் நேற்றைய தினம் முதற்கொண்டு சுயநினைவற்றிருக்கிறான். நீங்கள்

எப்படி (இவ்விதம்) நடந்து கொண்டு களிகூர்ந்தவர்களாக இருக்க முடிகிறது? நீங்கள் அதை மிகவும் லேசாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்பது போன்று காணப்படுகிறதே" என்றாள்.

57. அவர், "கவனி, என் பிள்ளையே" என்றார். அந்த வயதான மனிதர் தம்முடைய கரத்தை அந்த சிறு தாதியைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, "நீ அந்த இயந்திரத் துண்டை நோக்கிப் பார்க்கிறாய், ஏனெனில் பார்க்கும்படியாக உனக்குத் தெரிந்தது அவ்வளவு தான், ஆனால் நானோ ஒரு தெய்வீக

வாக்குத்தத்தத்தை நோக்கிப் பார்க்கிறேன்" என்றார்.

58. அது சரியே! இப்பொழுது அந்த பையன் விவாகம் செய்து, அவனுக்கு ஒரு குழந்தையும் உள்ளது. ஆகவே அது அப்படியே காண்பிக்கிறது... அது நீங்கள் எதை நோக்கிப் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. ஆகவே, நீங்கள் கவனியுங்கள், நீங்கள் கட்டாயம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நோக்கிப் பார்க்க வேண்டும், கவனியுங்கள். என்ன சம்பவித்தாலும் காரியமில்லை, தேவனுடைய வாக்குத்தத்தத்தையே நோக்கிப் பாருங்கள். நீங்கள் எப்படி

உணருகிறீர்கள் என்பதல்ல, ஆனால் தேவன் என்ன சொன்னார் என்பது தான். இப்பொழுது அது தான் ஆபிரகாமுடைய விசுவாசமாக இருக்கிறது. அவன் இங்கே இருந்த போது, அநேகமாக இப்பொழுது... அவனுக்கு 75 வயதும் சாராளுக்கு 65 வயதும் ஆகியிருந்தது. அவர்கள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்று அவர் கூறினார். ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனாயிருந்து, தேவனை ஸ்தோத்தரித்துக் கொண்டிருந்தான், தேவனால் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்ள முடியும் என்று அவன் அறிந்திருந்தான். ஆமென்!

# ~ 24 ~

(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)



# சகோ.பிரன்ஹாமின் உறவினர் வியாதிப்படுக்கையிலிருந்து சுகம் பெற்று எழும்புதல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: தானியேலின் எழுபது வாரங்கள், ஆகஸ்ட் 6, 1961, பத்தி எண் 32-36

சில நாட்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவில், பில்லி... அல்லது எனது மருமகள் நடுநிசியில் என்னை தொலைபேசியில் கூப்பிட்டு, மருத்துவமனையில் மரித்துக்கொண்டிருக்கிற நிலையில் எனது உறவினர் ஆண்டி ஹெர்மன் என்ற பெயருள்ளவர் இருக்கிறார் என்று கூறினாள். நான் போய் அவரைப் பார்த்தேன். அவருக்கு மிக அதிகமாக மயக்க மருந்து கொடுத்திருந்ததால், அவர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தார், எனவே என்னால் அவருடன் பேச முடியவில்லை. அடுத்த நாள் காலையில்... நான் அவரிடம் பேச இயலுகிற வரையிலும் அவரை

உயிரோடு வைத்திருக்கும்படி நான் தேவனிடம் வேண்டினேன். “அட்,” அவர் ஒரு நல்ல மனிதர், ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவர் அல்ல. அவர் எனது அங்கிள் அல்ல, ஆனால் எனது உறவினள் ஒருத்தியை அவர் விவாகம் செய்திருந்தார்.

அப்பொழுது அங்கே நின்று கொண்டிருந்த ஹாட்டி அத்தை அவர்கள், பில்லி, இவர் தன்னுடைய இந்த எண்பது வருட வாழ்க்கை முழுவதும் தேவனை சேவிக்கவில்லை. சில வாரங்களுக்கு முன்பாக வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்து....” அவர் எண்பது வயதுள்ளவர். இயல்பாகவே அவர் அதிகமாக உடல் உழைப்புச் செய்வதில்லை.

அவர் அந்த அம்மாளை அழைத்து, “ஹாட்டி, உனக்கு ஒரு காரியம்

தெரியுமா? சில நிமிடங்களுக்கு முன்பாக கிறிஸ்து எனக்கு முன்பாக வந்தார்'' என்றார்.

அவள் அவரை நோக்கிப் பார்த்து, ‘‘என்ன விஷயம்'' என்று கேட்டாள்.

அவர் கூறினார், ‘‘இல்லை அவர் இங்கே எனக்கு நேர் முன்பாக நின்று, ஒரு காரியத்தை என்னிடம் அவர் கூறினார்.''

‘‘அவர் என்ன கூறினார்'' என்று கேட்டாள்.

‘‘நீர் நினைக்கிறதைவிட நேரம் பிந்திவிட்டது'' என்று.

அப்போதிலிருந்து சில வாரங்களுக்குப் பிறகு, இரண்டு மூன்று வாரங்களுக்குப் பின்பு அவருக்கு ‘‘ஸ்ட்ரோக்'' ஏற்பட்டு, பக்கவாதம் வந்து மருத்துவமனையில் மரிக்கிற நிலையில்

கிடந்தார். அத்தை ஹாட்டியிடம், “நீர் என்னையோ அல்லது வேறு யாரையுமோ, இப்பொழுது அவர் வந்தெட்டியிருக்கும் இந்த நிலையில், அவரது இருதயத்தை சரியான நிலைக்கு உட்படுத்துவதற்காக, அழைக்காமலிருந்ததற்காக நீங்கள் வெட்கப்பட வேண்டும்” என்று நான் கூறினேன்.

அடுத்த நாள் காலையில் நான் கர்த்தரிடம் வேண்டினேன். அப்பொழுது நான்... அவரால் என்னோடு பேச முடியவில்லை. எனவே நான் அவரிடம், “அங்கிள் ஆண்டி அவர்களே, நான் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா?” என்று கேட்டேன். அப்பொழுது அவர் தன் தலையை சிறிதளவு அசைத்தார். தன் தாடையையும் அசைத்தார். நான் அவருக்காக ஜெபித்து, அவர் தன்னுடைய பாவங்களை தேவனுக்கு முன்பாக

அறிக்கையிடும் படி செய்தேன். நான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்பினேன்; அத்தை ஹாட்டியும் அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட விரும்பினார்கள்.

பிறகு நான் ஹாலுக்குச் சென்று, அங்கே சுற்று வட்டாரத்தில் வாழ்ந்து வந்த ஒரு இளம்பெண்ணை சந்திக்கச் சென்றேன். அவர்கள் அவளை மனநோய் மருத்துவ நிலையத்திற்கு அனுப்புவதற்காக இருந்தார்கள். கர்த்தர் அப்பெண்மணிக்கு ஒரு பெரிய காரியத்தைச் செய்தார். அதினால் அவள் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

பிறகு, சாலையிலே, கருப்பு நிறத்தவரான ஒரு சகோதரியைச் சந்தித்தேன். அவள், "நீங்கள் சகோதரன் பிரான்ஹாம் அல்லவா?" என்றாள்.

"நான்தான்" என்றேன் நான்.

“உங்களுக்கு என்னை நினைவிருக்கிறதா? நான் தான் திருமதி. ட்ரை” என்று கூறினாள்.

நான், “ஆம், ஞாபகமிருக்கிறது என்று எண்ணுகிறேன். பீட்டரையையும் மற்றோரையும், ஆம் உங்களையும் ஞாபகமிருக்கிறது” என்றேன். அவள் அறையினுள் எட்டிப் பார்த்தாள். அவள் ஏன் அதைக் கூறினாள் என்று நான் வியந்து கொண்டிருந்தேன். அங்கே அங்கிள் ஆண்டி தன் வியாதிப் படுக்கையில் இருந்து குணமடைந்து எழுந்திருந்தார். அவர் தன் கை கால்களை எவரையுமே போல் இயல்பாக அசைத்துக் கொண்டிருந்தார். அந்த வியாதிப்படுக்கையை விட்டு நீங்கியிருந்து, அங்கிருந்து போய்விட அவர் விரும்பினார். இப்பொழுது அவரும் அவருடைய மனைவியும், கர்த்தராகிய

இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வரப்போகிறார்கள்.

★★★★★

# மோசமான மூளை வியாதியால் பீடிக்கப்பட்ட பையன் சுகமடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பிசாசியல் - மதச் சார்பான மண்டலம், ஜூன் 9, 1953, பத்தி எண் 151-171

இப்பொழுது ரீடர்ஸ் டைஜஸ்ட் இதழில் அது எழுதப்பட்டுள்ளது, நான் அங்கே நின்று கொண்டிருந்தேன், இரண்டாயிரத்து எழுநூறு பேர் ஜெபம் செய்யப்பட காத்துக் கொண்டிருந்தனர், அவர்கள் அங்கே வெளியே நின்று கொண்டிருந்தனர். நீங்கள் அந்த கட்டுரையை வாசியுங்கள். கனடாவிலிருந்து ஒரு மனிதன் வந்திருந்தார், மேயோ மற்றும் ஜான் ஹாப்கின்ஸ் ஆகியோரிடம் வைத்தியம் பெற்ற ஒரு சிறிய பையனை வைத்திருந்தார், அவன் மிக மோசமாயிருந்த மூளை வியாதியால்

பீடிக்கப்பட்டு அவனுடைய சிறு கைகள் இந்த விதமாக இழுக்கப்பட்டிருந்தது, கீழிருந்த கால்கள் இழுக்கப்பட்டிருந்தது. ஆகவே அவர்கள், "இந்த வியாதிக்கு ஒரு அறுவை சிகிச்சையோ அல்லது எதுவுமோ இதற்கு செய்யமுடியாது" என்றனர்.

ஆகவே அவர் அவனை மறுபடியாக கனடாவிற்கு கொண்டு சென்றுவிட்டார். அவர், "நான் இன்னுமாக தளர்ந்து போகவில்லை" என்றார். ரீடர்ஸ் டைஜஸ்டின் நவம்பர் மாத பிரதியை நீங்கள் வைத்திருக்கிறீர்கள், அது டான்னி மார்டனின் அற்புதம் என்றவாறு தலைப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே – ஆகவே அப்பொழுது அந்த – அந்த மனிதன், "நான் இன்னும் தளர்ந்து போகவில்லை, ஏனெனில் செவிடும் ஊமையுமாயிருந்த என்னுடைய இரண்டு

நண்பர்களை பேசவும் கேட்கவும் செய்த வில்லியம் பிரான்ஹாம் என்னும் விசுவாச சுகமளிப்பவரை நான் அறிவேன்" என்று கூறினதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே அவர்கள் நான் எங்கேயிருக்கிறேன் என்பதைக் கண்டறிய அவர்கள் தொலைபேசி செய்தனர், நான் அமெரிக்காவில் இருந்தேன். நான் கலிபோர்னியாவிலுள்ள காஸ்டா மேசாவில் இருந்தேன். அது ஒரு கட்டுரை, நீங்கள் அதை வாசிக்கும்போது, அழத் தயாராயிருங்கள். அது உங்கள் இருதயத்தை உடைத்துவிடும். அவர் எவ்வாறு அந்த பனியிலும் எல்லாவற்றினூடாகவும், இந்த குழந்தையுடன் அவர் கடந்து வந்தார்! அவர், "டான்னி கவனமாயிரு. இப்பொழுது, நாம் தோல்வியுறவில்லை" என்றார். அந்த சிறிய பையனால்

புன்னகை கூட செய்யமுடியவில்லை, அவன் மிகவுமாக வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தான். “நாம் தோற்கடிக்கப்படவில்லை, நாம் தேவனைக் கேட்கப் போகிறோம். நாம் தேவனுடைய தீர்க்கதரிசியிடம் சென்று அவரைக் கேட்போம்” என்றார்.

ஆகவே அப்பொழுது அவர்கள் பனியினூடாக வந்தனர். பிறகு முடிவில் அவர்கள் அங்கே வந்தடைந்தனர். அவர்களுடன் தாயும் வந்தாள், விமானத்தில் செல்லத்தக்கதாக போதுமான பணம் அவர்களிடம் இல்லாதிருந்தது, ஆகவே அவர்கள் தாயை திருப்பி அனுப்பிவிட்டனர். அந்த பையனும் அவனுடைய அப்பாவும் பேருந்தில் வரவேண்டியதாயிருந்தது, அவர்கள் கனடாவிலுள்ள வின்னிபெக்கிலிருந்து கலிபோர்னியாவிலுள்ள காஸ்டா

மேஸாவிற்கு அவ்வளவு தூரம் பிரயாணம் செய்து வந்தனர். அவர்கள் அங்கே உள்ளே சென்றனர், கடினப்பட்டனர், அந்த சிறிய குழந்தை அணியாடைகளை எவ்விதமாகவெல்லாம் அணிவிக்க வேண்டியதாக இருந்ததென்பதை அந்த தகப்பன் கூறிகின்றார். அவன் ஒன்றுமே செய்யகூட முடியாமலிருக்க சுமார் ஏழு அல்லது எட்டு வயது நிரம்பின சிறிய பையன். மேலும் அவர்..... அவன் சாப்பிட கூட வாய்ப்பில்லாமல் எதுவுமே இல்லாமல், அவருடைய சிறிய பையன் அவர் பேசுவதை மாத்திரமே கேட்டுக் கொண்டிருந்தான் என்று கூறினார். அவனுடைய கண்கள் எவ்விதமாக காணப்பட்டதென்றும் அவன் – அவன் சிரிக்க முயன்றதையும் எப்படிக் கூறினார் என்று நீங்கள் அறிவீர்கள். ஆகவே அவருக்கு.... அமெரிக்காவில் அவனும்

காண்கின்ற வித்தியாசமான காட்சிகளை அவனிடம் அவர் கூறுவார்.

அவர்கள் அங்கே கலிபோர்னியாவிற்கு சென்றபோது, அவர்கள் காணவந்ததைப் பற்றி பிரயாணிகள் வழிகாட்டியிடம் (Traveler's aid) கேட்டனர். அவரோ, "எதைக் காண வந்தீர்கள், தெய்வீகமா?", என்றார். ஒரு பெரிய கேள்விக்குறி.

அதைக்குறித்து அமெரிக்கா என்ன கூறுகின்றது என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும், உங்களுக்குத் தெரியும். பாருங்கள், "நாங்கள் கூர்மையான அறிவுத்திறம் வாய்ந்தவர்கள்! நாங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறோம் என்பதையுமே கூற வேண்டிய அவசியம் கிடையாது. எல்லாவற்றையுமே நாங்கள் எழுதப் பெற்றிருக்கிறோம்." பாருங்கள்?

ஆகவே அப்பொழுது, "என்ன தெய்வீகம்? இதற்குத்தானா கனடாவிலிருக்கின்ற வின்னிபெக்கிலிருந்து இவ்வளவு தூரம் கடந்து வந்திருக்கிறீர்கள்?" என்ன, அது பயங்கரமானது என்று நினைத்தனர்.

எப்படியாயினும், அந்த செய்திதாள் நிறுவனம் ஒரு - ஒரு காரை அனுப்பி அவரை அங்கு அனுப்பி வைத்தது. மேலும் அவர் கூறியதாவது, அவர்கள் வரிசையை அடைந்த போது, அங்கே ஜெபிக்கப்படத்தக்கதாக இரண்டாயிரத்து எழுநூறுபேர் காத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த உருக்குலைந்து விகாரமான சிறு தோற்றமுடையவனாக காணப்பட்ட பையனையும், அந்த தொப்பியுடனும், கந்தையான கிழிந்த கோட்டை அணிந்திருந்த அவரையும், ஒவ்வொருவரும் சற்று தள்ளி

கண்டபோது, அவருக்கு இடமளித்ததாகக் கூறினார். அவர் பிரசங்க மேடைக்கு வந்தபோது.....

ஒரு ஜெப அட்டையை மாற்றிக் கொள்வது விதிகளுக்கு புறம்பான ஒன்றாகும். யாராவது ஒருவர் கூட்டத்திற்கு வந்து உங்களுடைய அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் வரிசையில் இன்னொருவர் பேரில் ஜெப அட்டையை மாற்றிக் கொள்ளும் போது, கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஜெப அட்டை நிராகரிக்கப்படும். பாருங்கள்? ஏனெனில் நீங்கள் வந்து விதிமுறைகளை அறிந்து கொள்ள வேண்டும். அது உங்களைப் பொருத்தது. நீங்கள் வேறொருவருக்காக வந்து அதைப் பெறமுடியாது. அதற்கு செவிசாய்க்கத்தக்கதாக உங்களுக்காக நீங்கள் தான் வந்து அதைப்

பெற்றுக்கொள்ள வேண்டும். யாரோ பெரிய மனிதர் வந்து, "ஒருக்கால்.... நல்லது, இந்த காரியத்தில் அவ்வளவாக எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், ஒருக்கால் அவர் எனக்கு சுகமளித்தாரானால், நான்...." என்பாரானால், உங்களுக்கு புரிகின்றதா? அப்பொழுது அது பிரசங்க மேடையில் ஒரு தேவையற்ற குழப்பத்தை உண்டாக்கும், ஆகவே இந்த காரியமானது இங்கு வரும் முன்னே அதை அவர்கள் களையெடுத்து விடுகின்றனர்

ஆகவே அந்த பையன் வந்தபோது, அல்லது அந்த தகப்பன் பிரசங்க மேடையின் மீது வரிசையில் தாண்டி முன்னோக்கி வந்த போது, அவருடைய ஜெப அட்டையை பில்லி கேட்டான். அவரிடம் எதுவுமே இல்லை. "அப்படியானால்

மன்னித்துக்கொள்ளுங்கள் ஐயா, நீங்கள் சற்று காத்திருக்க வேண்டும்'' என்றான்.

அவர், ‘‘சரி, நான் காத்திருக்கிறேன். அப்படியானால் மற்றவர்களைப் போல என் தருணம் வரும் வரை காத்திருப்பேன், இவ்விதமாகச் செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியாது'' என்றார்.

நான் யாரோ ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன், அதை நான் கேட்கும்படியானது. அந்த தகப்பன் திரும்பிச் செல்வதை நான் கண்டேன், ‘‘என்ன ஆயிற்று?'' என்று வினவினேன்.

‘‘அவர் ஜெப அட்டையை வைத்திருக்கவில்லை'' என்று கூறினான்.

அப்பொழுது ஏதோ ஒன்று, ‘‘அவரை இங்கே கூப்பிடு'' என்று என்னிடம் கூறினது.

ஆகவே நான், “அவரை இங்கே அழைத்து வா” என்றேன். அந்த தகப்பன் மேலே வந்தார், அவருடைய முகத்தில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது, சவரம் செய்யப்பட வேண்டியதாயிருந்தது. அவர் – அவர் மேலே வந்தார், ரீடர்ஸ் டை ஜஸ்ட் பத்திரிகை கூறினது இதோ. பாருங்கள்? நான் எந்த கேள்விகளையும் கேட்கவில்லை, ஆனால், குழந்தை முகத்தை நேராக உற்று நோக்கினேன், அந்த குழந்தை எங்கிருந்து வருகிறதென்றும், அது மேயோ மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லப்பட்டதென்றும், அதைக் குறித்த காரியம் என்னவென்றும் எவ்வளவாக வியாதிப் பட்டிருக்கிறதென்றும், எல்லாவற்றையும் கூறினேன்.

அப்பொழுது அந்த தகப்பன் அழ ஆரம்பித்தார், அவர் புறப்பட

ஆரம்பித்தார். அவர் பிரசங்க மேடையை விட்டுக் கிளம்பினார், அப்பொழுது அவர் திரும்பி, "அது சரிதான் ஐயா" என்றார். "ஆனால் என்னுடைய குழந்தை பிழைத்துக் கொள்ளுமா?" என்றார்.

நான், "அது என்னால் கூறமுடியாது" என்றேன். "சற்று பொறுங்கள்" என்றேன். ஒரு தரிசனம் தோன்றுவதைக் கண்டேன். நான், "நீங்கள் இதை விசுவாசிக்க விரும்பவில்லை, ஏனெனில் மேயோ மற்றும் ஹாப்கின் மருத்துவர் இருவருமே அந்த மூளையில் அறுவைச்சிகிச்சை செய்யமுடியாதென்று கூறியிருக்கின்றனர், ஆனால் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நான் உங்களுக்கு கூறுகிறேன். நாளை நீங்கள் இந்த குழந்தையை எடுத்துச் செல்லுங்கள். அடுத்த மூன்று நாட்களுக்குள் தெருவில் ஒரு கறுத்த தலையைக் கொண்டிருக்கும்

ஒரு பெண்ணை சந்திக்கப் போகிறீர்கள். இந்தக் குழந்தைக்கு என்ன ஆயிற்றென்று அந்த பெண் உங்களுக்குச் சொல்லுவாள். அறுவை சிகிச்சை செய்யப்போகிற ஒரு சிறிய நாட்டு மருத்துவரைக் குறித்து அவள் உங்களிடம் கூறப் போகின்றாள், நீங்கள் அதை நம்பவிரும்பமாட்டீர்கள், ஏனென்றால் மேயோ மருத்துவர்களே 'அது செய்யப்படவே முடியாது' என்று கூறி கையை விரித்து விட்டிருந்தனர். ஆனால், உங்கள் குழந்தைக்கு இருக்கின்ற ஒரே வாய்ப்பு அதுவேயாகும், தேவனுடைய வல்லமையின் மூலமாகவும், தேவனுடைய இரக்கத்தினாலும் அந்த அறுவைச் சிகிச்சையினாலும், இப்பொழுது, நான் தேவனுடைய தீர்க்கதரிசியென்று நீங்கள் விசுவாசிக்கிறீர் என்றால், நான் கூறின விதமாகவே நீங்கள் போய்ச் செய்யுங்கள்'' என்றேன். எசேக்கியாவின்

மீது அத்தி இலைகளையும் மற்றதையும் போட்டது போல.

அவர் திரும்பி, “உமக்கு நன்றி” என்றார். அவர் கடந்து சென்று விட்டார்.

இரண்டு அல்லது அதற்கு அதிகமான நாட்கள் கடந்தது, ஒரு நாளிலே அவர் தெருவில் நடந்து கொண்டிருந்தார், ஒரு பெண் அவரிடம் நடந்து வந்து, “உங்களுடைய குழந்தைக்கு என்ன ஆயிற்று?” என்றாள்.

“அது ஒரு - ஒரு மூளை வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறது” என்றார். அவர் அவ்விதமாக பேசிக்கொண்டேயிருந்தார். ஆகவே, மேலும், அவர்கள் - அவர்கள் அது மிக மோசமான ஒன்று என்று எண்ணியிருந்தனர், அது உங்களுக்கு தெரியும்.

மேலும் அவர் சில நிமிடங்களில் ஏதோ சம்பவித்ததாகக் கூறினார். அவள், “ஐயா, அந்த அறுவைச் சிகிச்சையை செய்யக்கூடிய ஒருவர் எனக்குத் தெரியும்” என்றாள்.

இவர், “ஸ்திரியே, பார், அது செய்யப்பட முடியாதென்று கூறி மேயோ சகோதரர்கள் அதை கைவிட்டுவிட்டனர். இங்கே இருக்கின்ற வில்லியம் பிரன்ஹாம் என்னும் பெயர் கொண்ட ஒரு மனிதன் அதற்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். குழந்தைக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுத்தார். ‘ஒரு நிமிடம் பொறுங்கள்! கறுப்பு - தலை சாம்பல் நிறம் கொண்ட சூட்டை அணிந்திருப்பாள். அது அவள் தான்” என்றார். “அந்த மருத்துவர் எங்கே இருக்கிறார்?” அவர் அவரிடம் கூறினார். அவர் குழந்தையை அங்கு கொண்டு சென்றார். அந்த மருத்துவர் அறுவைச்

சிகிச்சையைச் செய்தார், குழந்தை சுகமானது.

இப்பொழுது, இது ரீடர்ஸ் டைஜஸ்ட் இதழின் மூலம் வெளிவந்த காரியம். ஆகவே மேயோ சகோதரர்கள் அதைக் குறித்து ஒரு பேட்டி எடுக்க என்னைச் சந்தித்தனர். "ரெவரெண்ட் பிரான்ஹாம் அவர்களே, அந்த குழந்தைக்கு நீர் என்ன செய்தீர்?" என்றனர்.

நான், "ஒன்றும் செய்யவில்லை. நான் அதை தொடவும் இல்லை. அதனிடம் என்ன கூறவேண்டுமென்று தேவன் என்னிடம் என்ன கூறினாரோ அதை மாத்திரமே நான் கூறினேன். அந்த மனிதன் அதற்கு கீழ்ப்படிந்தார்" என்று கூறினேன்.

★★★★★

நானோ அப்படியே தொடர்ந்து ஜெபித்து, ஜெபித்துக் கொண்டேயிருந்தேன்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **தெய்வீக சுகமளித்தலின் நியமங்கள்**, செப்டம்பர் 23, 1951, பத்தி எண் 65

அந்த நாளில், அங்கே மில்டவுனில், இரவு உணவு அருந்த தூரமாக திரு. ரைட் அவர்களிடம் சென்றேன். இதோ, அவர் சரியாக இங்கேயே இருக்கிறார். மேலும் அவர்...

நான், "சகோதரன் ரைட் அவர்களே, நான் ஜெபிக்கும்படியாக மேலே அந்த மலைக்குப் போயாக வேண்டும்" என்றேன்.

நான் மேலே சென்று – அங்கே மேலே போய், புதர்களுக்குள்ளே முழங்காற்படியிட்டு, ஜெபித்துக் கொண்டிருந்தேன், அப்போது முட்கள் என்மேல் குத்திக் கொண்டிருந்தன.

நான் ஜெபத்தை நிறுத்த முடியாதிருப்பது போன்றே தோன்றினது.

இரவு உணவுக்கான மணி அடிப்பதை நான் கேட்டேன், அப்பொழுது ரைட் தாயார் நாங்கள் வரும்படி விரும்புகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

நானோ அப்படியே தொடர்ந்து ஜெபித்து, ஜெபித்துக் கொண்டேயிருந்தேன்.

நான், "கர்த்தாவே, நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்" என்று கேட்டேன்.

திடீரென்று, இதோ அந்த ஒளி வருகிறது, அது ஒருவகை புதரின் (dogwood bush) வழியாக இறங்கி வந்து, சரியாக என்மேல் பிரகாசித்தது; அப்பொழுது ஒரு சத்தம், "கார்ட்டர்ஸ் வழியாகப் போ" என்று கூறுவதைக் கேட்டேன்.

அது போதுமானதாக இருந்தது.

★★★★★

# மில் டவுன் தரிசனம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## புத்தகம்: இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசி

சில நாட்கள் கழித்து, சகோ.பிரான்ஹாம் அவர் தாயாரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். இந்த தரிசனமும் மற்ற தரிசனங்களைப் போலவே விடியற்காலை ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று மணிக்கு உண்டானது. தரிசனத்தில் அவர் இருள் சூழ்ந்த ஒரு காட்டில் இருந்தது போல தோன்றினது. அவர் நடந்து செல்கை யில் மிகவும் பரிதாபமான ஒரு குரல் கேட்டது. அது ஒரு

ஆட்டுக் குட்டி அழுவது போல் இருந்தது. “அந்த ஏழை மிருகம் எங்குள்ளது என்று நினைத்து மேகமூட்டத்தினால் ஏற்பட்டிருந்த இருளின் வழியாக அதை தேடிச் சென்றார். ஆனால் அவர் அந்த சத்தத்தை நெருங்கு கையில் அது ஒரு மனிதக் குரலாக இருந்து, ’மில் டவுன், மில் டவுன்“ என்றுரைத்தது.

சகோ. பிரான்ஹாம் இந்த பெயரை முன்பு கேட்டதேயில்லை. அப்பொழுது அவர் அந்த தரிசனத்தை விட்டு சுயநினைவுக்கு வந்தார். அவர் தன் நண்பர்களிடம்,

எங்கோ ஓரிடத்தில் தேவனுக்குச் சொந்தமான ஆட்டுக்குட்டிகளில் ஒன்று துயரத்தில் இருப்பதாகவும், அந்த இடம் மில்டவுன் என்றழைக்கப்படும் இடத்துக்கு அருகில் உள்ளதாகவும் கூறி வந்தார். சகோ. பிரான்ஹாமின் சபைக்கு வரும் ஜார்ஜ் ரைட் என்னும் பெயர் கொண்ட ஒருவர், தான் வசித்துக் கொண்டிருந்த இடத்துக்கு சிறிது தூரத்தில் மில்டவுன் என்னும் ஓரிடம் இருப்பதாக கூறினார். (அவர் இந்தியானாவிலுள்ள டீ பா என்னுமிடத்தில் வசிக்கிறார்). எனவே அடுத்த சனிக்கிழமை,

சகோ. பிரான்ஹாம் மில்டவுனுக்குச் சென்றார்.

62. அந்த இடத்தை அடைந்ததும், அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவர் ஏதாவதொன்றை அங்கு செய்ய வேண்டும் என்று கர்த்தர் அவரிடம் உரைப்பதாக அவருக்குத் தோன்றவேயில்லை. முடிவில் அவர் ஒரு அங்காடிக்கு முன்பாக ஒரு தெருக்கூட்டம் நடத்த தீர்மானித்தார். அப்பொழுது அவருடன் கூட வந்திருந்த சகோ. ரைட், அவர் அங்கு செய்ய வேண்டிய வேலை ஒன்று உள்ளதாகவும், சகோ. பிரான்ஹாம்

அவருடன்கூட வரமுடியுமா என்று கேட்டார். அதற்கு அவர், “சரி ஐயா, நான் வருகிறேன்“ என்றார். அவர்கள் ஒரு மலையின் மேல் காரில் சென்று கொண்டிருந்த போது. சகோ. பிரான்ஹாம் ஒரு கல்லறையின் பக்கத்தில் ஒரு பெரிய பாப்டிஸ்டு ஆலயம் இருப்பதைக் கண்டார். சகோ. ரைட் அவரிடம், “சவ ஆரா தனைகளுக்குத் தவிர, வேறெதற்குமே இந்த ஆலயம் உபயோகப்படுத்தப்படவில்லை“ என்றார். அவர் அதை சொன்ன மாத்திரத்தில் சகோ. பிரான்ஹாம் தன் இருயத்தில் ஏதோ ஒரு

அசைவு ஏற்படுவதை உணர்ந்தார். அங்கு தான் கர்த்தருக்கு அவருடைய தேவை இருந்தது. அவர் சகோ.ரைட்டிடம் இதைக் கூறின் போது, சகோ.ரைட், “நான் போய் ஆலயத்தின் திறவுகோல்களை வாங்கிக் கொண்டு வருகிறேன். நீங்கள் உள்ளே சென்று அதை பாருங்கள்“ என்றார். சகோ. பிரான்ஹாம் ஆலயத்தின் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு, “பரலோகப் பிதாவே, இங்கு தான் நான் வரவேண்டும்மென்று நீர் விரும்பியிருந்தால், எனக்கு கதவைத் திறந்து தாரும் என்று

ஜெபித்தார். அது நடக்க கர்த்தர் அனுமதித்தார். ஒரு கூட்டம் அங்கு நடத்தப் போவதாக சகோ. பிரான்ஹாம் அறிவித்தார். ஆனால் சூழ்நிலை மிகவும் கடினமாயிருக்கும் என்று அவர் விரைவில் அறிந்து கொண்டார், ஏனெனில் அங்கிருந்த சபைகள் தெய்வீக சுகமளித்தலுக்கு விரோதமாய் போதித்திருந்தன.

சகோ. பிரான்ஹாம் கூட்டத்துக்கு வரும்படி அழைத்த முதல் மனிதன், “எந்த எழுப்புதல் கூட்டத்துக்கும் செல்ல எங்களுக்கு நேரமில்லை, நாங்கள் கோழிப்

பண்ணை வைத்திருக்கிறோம், வேறெதற்கும் எங்களுக்கு நேரமே இல்லை” என்று சொல்லிவிட்டான். ஆனால் சிறிது காலத்துக்குப் பிறகு அவன் இறந்து போனான், அவனால் கோழிகள் வளர்க்க இயலாமல் போனது.

63. அடுத்த ஞாயிறன்று அவர்கள் எழுப்புதல் கூட்டத்தை தொடங்கினர். நான்கு பேர் மட்டுமே கூட்டத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் ரைட்டின் குடும்பத்தினர். அடுத்த இரவு கூட்டம், சென்ற இரவு கூட்டத்தை விட சற்று நன்றாயிருந்தது.

மூன்றாம் இரவின் கூட்டத்தின் போது கொடூர தோற்றம் கொண்ட ஒரு மனிதன் ஆலயத்தின் வாசற்படியில் வந்து தன் புகைக் குழாயிலிருந்து புகையிலை சாம்பலை கீழே கொட்டி விட்டு, உள்ளே நுழைந்து பின்னால் உட்கார்ந்து கொண்டார். அவர் சகோ.ரைட்டிடம். “அந்த பில்லி சண்டே எங்கே? அவரை நான் நன்றாக காண விரும்புகிறேன்“ என்றார். சகோ.ரைட் சகோ பிரான்ஹாமிடம் வந்து, “கடினமான ஒருவர் இப்பொழுது தான் கட்டிடத்துக்குள் வந்திருக்கிறார்“ என்றார். ஆனால் அன்றிரவு

ஆராதனை முடியும் முன்பு, அவர் பீடத்துக்கு நடந்து வந்து தேவனை நோக்கி கூக்குரலிட்டார். அவருடைய பெயர் வில்லியம் ஹால். அவர் இப்பொழுது அந்த சபையின் போதகராக இருந்து வருகிறார்.

விரைவில் அநேகர் கூட்டத்துக்கு வரத் தொடங்கினர். சகோ. பிரான்ஹாம் ஜனங்களிடம் அவர் கண்ட தரிசனத்தைக் குறித்து கூறினார். அப்பொழுது சகோ. ஹால் அவரிடம், “சகோ. பிரான்ஹாமே, இங்குள்ள இந்த மலையின் மேல் ஒரு பெண்

வசிக்கின்றாள். அவள், “இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்” என்னும் உங்கள் புத்தகத்தை படித்துக் கொண்டு வருகிறாள். அவள் எட்டு ஆண்டு ஒன்பது மாத காலமாக படுக்கையில் படுத்துக் கொண்டேயிருக்கிறாள், அவளால் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே முடியவில்லை. அவளுக்கு காச நோய் உள்ளது. அநேக ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவர்கள் அவள் பிழைப்பாள் என்ற நம்பிக்கையில்லை என்று சொல்லி விட்டனர். இப்பொழுது அவளுக்கு 23 வயதாகின்றது. காச

நோய் அவளை தின்று கொண்டே வருவதனால், அவளுடைய எடை இப்பொழுது ஏறக்குறைய நாற்பது பவுண்டு மட்டுமே. உம்மை அவளிடம் கொண்டு வரவேண்டுமென்று அவள் எவ்வளவோ கெஞ்சியும் அழுதும் பார்த்துவிட்டாள். ஆனால் அவளுடைய பெற்றோர் இங் குள்ள ஒரு குறிப்பிட்ட சபையைச் சேர்ந்தவர்கள், அந்த சபையிலுள்ள யாராகிலும் உம்முடைய கூட்டத்துக்கு சென்றால், அவர்கள் சபையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்

அவளிடம் போவீரா? என்று கேட்டார்.

அதற்கு சகோ. பிரான்ஹாம், “அவளுடைய பெற்றோர் சம்மதம் தெரிவித்தால், நான் போகத் தயாராயிருக்கிறேன்“ என்றார். தேவன் அவரை அந்த வழியாக நடத்துகிறார் என்று சகோ. பிரான்ஹாம் உணர்ந்தார். அந்த பெண்ணின் பெயர் ஜார்ஜியா கார்டர். அவளும் டைய தந்தை கல் உடைக்கும் ஓரிடத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தார். அந்த பெண்ணின் தாயார், சகோ. பிரான்ஹாம் சென்று அந்த

பெண்ணைக் காணலாம் என்று அனுமதி அளித்தாள். ஆனால் அந்த நேரத்தில் அவளும் அவளுடைய தகப்பனும் வீட்டில் இருக்க மாட்டார்கள் என்று தகவல் அனுப்பினாள்.

**64.** சகோ. பிரான்ஹாம் அந்த பெண் இருந்த அறைக்குள் பிரவேசித்த போது அவளிடம், “நீ என்ன படித்தாயோ அதை விசுவாசிக்கிறாயா?“ என்று கேட்டார். அவள், “ஐயா, நான் விசுவாசிக்கிறேன்“ என்றாள். அவள் மிகவும் தாழ்ந்த குரலில் இதை கூறினதால், அவள்

கூறியதைக் கேட்க அவர் அவள் அருகாமையில் குனிய வேண்டியிருந்தது. தெய்வீக சுகமளித்தலைக் குறித்து தற் பொழுது அவருக்குள்ள அறிவைப் போல் அப்பொழுது அவருக்கு இருக்கவில்லை. ஆனால் அவர் தரிசனத்தில் மக்கள் சுகம் பெறுவதை காணும்போது, அவர்களுக்காக ஜெபிப்பது வழக்கமாயிருந்தது. எனவே, அவர் அவளிடம் சுகமடைந்த நேல் பெண்ணைப் பற்றி எடுத்துக்கூறி, அவளுக்கு ஜெபிக்க வேண்டுமென்று தேவன் அவருக்கு ஒரு தரிசனத்தில் காண்பிக்கும்படி

அவள் ஜெபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். (பிற்காலத்தில் அவர், தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதன் மூலம் எல்லோரும் சுகம் பெற முடியும் என்றும், அநேகர் சுகம் பெறுவதை தேவன் அவருக்கு தரிசனத்தில் வெளிப்படுத்துகிறார் என்றும் அறிந்து கொண்டார்).

கூட்டங்கள் அந்த இடத்தில் தொடர்ந்து நடைபெற்றன. தேவன் தொடர்ந்து ஆசீர்வதித்துக் கொண்டே வந்து, முடிவில் நூற்றுக் கணக்கானோர் கூட்டங்களுக்கு வர ஆரம்பித்தனர். ஒருநாள் சகோ.

பிரான்ஹாம் பாட்டம் ஃபோர்டு என்னுமிடத்தில் இருக்கும் நீல நதியில் ஞானஸ்நான ஆராதனை நடத்திக் கொண்டிருந்தார். அந்த பிற்பகலில் அவர் முப்பது நாற்பது பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. அதற்கு சற்று முன்பு, அந்த இடத்தில் ஒரு ஊழியக்காரர் கூட்டம் ஒன்றை நடத்தி, முழுக்கு ஞானஸ்நானத்துக்கு விரோதமாய் பிரசங்கித்தார். ஆனால் அந்த பிற்பகலில் தேவன் தமது வல்லமையை சிறப்பாக வெளிப்படுத்தினதன் விளைவாக, அந்த ஊழியக்காரரைச் சேர்ந்த

பதினைந்து பேருக்கும் அதிகமானவர்கள் தாங்கள் உடுத்தியிருந்த நல்ல உடை களுடன் தண்ணீருக்குள் நடந்து சென்று ஞானஸ்நானம் பெற்றனர்.

65. அந்த வாரம் முழுவதும் ஜார்ஜியா ஜெபித்துக் கொண்டே வந்தாள். அவள், “ஓ. கர்த்தாவே, சகோ. பிரான்ஹாம் என்னை மறுபடியும் காணும்படி அவரை அனுப்புவீராக; நான் சுகம் பெறுவதை அவருக்குத் தரிசனத்தில் காண்பிப்பீராக. அப்பொழுது நான் மற்றவர்களுடன் கூட ஞானஸ்நானம் பெற முடியும்“

என்று ஊக்கமாக ஜெபித்தாள். ஞானஸ்நான ஆராதனைக்கான நாள் வந்த போது, அந்த பெண் மிகவும் அமைதியற்றவளாய் அழுது கொண்டேயிருந்தாள். தாயார் அவளை சமாதானப்படுத்த முயன்றாள். ஆனால் அவள் இருதயம் உடைந்து போய், அவளை சமாதானப்படுத்த இயல் வேயில்லை. ஞானஸ்நான ஆராதனை முடிந்தவுடனே, சகோ. பிரான்ஹாம் மாலை உணவுக்காக (supper) சகோ.ரைட்டின் வீட் டுக்குச் சென்றார். அவருடைய மற்ற தரிசனம் நிறைவேறின் போது அவருடன் கூட இருந்து சகோ.

ப்ரேஸ் என்பவரும் அவருடன் சகோ.ரைட்டின் வீட்டுக்கு சென்றிருந்தார். அப்பொழுது ஆவியானவர் சகோ.பிரான்ஹாமிடம், "இப்பொழுது உணவு அருந்தாதே, காட்டுக்குப் போய் ஜெபி' என்றார். எனவே சகோ. பிரான்ஹாம் அங்கிருந்தவர்களிடம், "நான் ஜெபிப்பதற்காக காட்டுக்குச் செல் கிறேன். உணவு தயாரானவுடன் மணி அடியுங்கள், அப்பொழுது நான் வந்து விடுகிறேன்" என்றார் (அவர்கள் நகர்புற மணி ஒன்றை வைத்திருந்தனர்). இவ்விதம் சொல்லிவிட்டு, சிறிது தூரத்

திலிருந்த காட்டுக்கு சென்று ஜெபிக்கத் தொடங்கினார்.

அவருடைய உடையில் அநேக அட்டைகள் ஒட்டிக் கொண்ட தால் அவருக்கு ஜெபிப்பது கடினமாயிருந்தது. கூட்டத்துக்கு நேரமாகி விடுமோ என்று அவர் எண்ணிக் கொண்டேயிருந்தார். இருப்பினும், அவர் முழு இருதயத்தோடும் ஜெபிக்கத் தொடங்கினார். விரைவில் அவர் ஆவிக்குள்ளானார். முடிவில் காட்டில் எங்கோயிருந்து கூப்பிடும் ஒரு சத்தத்தை அவர் கேட்டார். அவர் எழுந்தார், சூரியன் மறைந்து

இருட்டாகத் தொடங்கினது. உணவு மணி அடித்தது. ஆனால் அவர் அதைக் கேட்கவில்லை. அவரைக் கண்டு பிடிக்க, தேடுகிறவர்கள் அனுப்பப்பட்டனர். அவர் எழுந்தபோது, வானத்திலிருந்து மஞ்சள் நிற ஒளி ஒன்று புறப்பட்டு காட்டில் வீசுவதை அவர் கண்டார். ஒரு சத்தம் அவரிடம், “கார்டரின் வீட்டுக்குச் செல்“ என்றுரைத்தது. அவ்வளவுதான். அதன் பிறகு காட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து சத்தம் எழும்பி, “ஒ, சகோ. பிரான்ஹாமே“ என்று அவரை அழைப்பதைக் கேட்டார். அவர் காட்டிலிருந்து வேகமாக

புறப்பட்டு ஏறக்குறைய சகோ.ரைட்டின் கரங்களில் போய் அடைந்தார். சகோ.ரைட் அவரிடம், “உணவு தயாராகி ஒரு மணி நேரத்துக்கு மேலாகி விட்டது. நாங்கள் உங்களை மணி அடித்து அழைத்துக் கொண்டிருந்தோம். என்ன நேர்ந்தது?“ என்று கேட்டார். சகோ. பிரான்ஹாம், “இப்பொழுது என்னால் உண்ண முடியாது. நாம் இப்பொழுது கார்டரின் வீட்டுக்குச் செல்லப் போகிறோம். ஜார்ஜியா குணமாவதற்கென கர்த்தர் என்னை அங்கு அனுப்புகிறார்“ என்றார். சகோ.ரைட் “நிச்சய மாகவா?“ என்று கேட்டார்.

சகோ.ரைட் கூப்பிட்ட போது, சகோ. பிரேஸ் வந்தார். அவர்கள் காரில் ஏறி ஏழு மைல் தூரத்திலுள்ள கார்டரின் வீட்டுக்குப் புறப்பட்டு சென்றனர். அவர்கள் மற்றவர்களிடம், உணவு உண்டு விட்டு ஆலயத்துக்கு நேராக வரும்படி கூறினர். அவர்களால் காத்திருக்க முடியவில்லை, ஏனெனில் தரிசனம் சகோ. பிரான்ஹாம் அங்கு செல்லும்படி உரைத்தது.

66. தேவன் கம்பியின் இரு முனைகளிலும் கிரியை செய்தார். ஜனங்கள் மாற்குவின் வீட்டில் ஒன்றுகூடி, அவர்கள் அனைவரும்

ஜெபித்துக் கொண்டிருந்த நேரத்தில் தூதன் பேதுருவினிடம் அங்கு போக உரைத்தது உங்களுக்கு நினைவிருக்கும். அதுபோன்று தான் இதுவும். அந்த நேரத்தில் ஜார்ஜியா அமைதியற்று இருந்தாள். தாயார் மிகவும் துயரமடைந்து, அடுத்த அறைக்குச் சென்று ஜெபிக்கத் தொடங்கினாள். அவள், “கர்த்தாவே, நான் என்ன செய்வேன்? அந்த ஆள் பிரான்ஹாம் இங்கு வந்து என் மகளை கலக்கமுறச் செய்துவிட்டார். அவள் ஒன்பது ஆண்டு காலமாக மரிக்கும் நிலையில் இருக்கிறாள். இந்த

மனிதன் யார்?' என்று கேட்டாள். அதன்பிறகு அவள் ஜெபசிந்தையில் ஆழ்ந்துவிட்டாள். அப்பொழுது திடீரென்று "மேலே நோக்கிப் பார்" என்னும் ஒரு சத்தத்தைக் கேட்டாள். அவள் தலை நிமிர்ந்து பார்த்தபோது, சுவற்றில் ஒரு நிழலைக் கண்டது போல் அவளுக்குத் தென்பட்டது. அது ஒரு நபரின் நிழல், அது இயேசுவின் உருவம் போல் காணப்பட்டது. அவள், "ஆண்டவரே, நான் என்ன செய்வேன்?" என்றாள். தரிசனத்தில் கர்த்தர் அவளிடம், "வாசலுக்குள் யார் வருகிறார்

என்று பார்“ என்றார். அவள் சகோ. பிரான்ஹாமையும் அவரைப் பின்தொடர்ந்து இருவர் வருவதையும் கண்டாள். அவருடைய பரந்த நெற்றியின் மூலமும் அவருடைய மார்பினருகில் அவர் பிடித்திருந்த வேதாகமத்தின் மூலமும் அவள் சகோ. பிரான்ஹாமை அடையாளம் கண்டு கொண்டாள். அவள், “நான் கனவு காணவில்லை, நான் கனவு காணவில்லை என்று எண்ணுகிறேன்“ என்று கூறத் தொடங்கினாள். அவள் பக்கத்து அறைக்கு ஓடிச் சென்று, “ஜார்ஜியா, ஏதோ ஒன்று

நடந்துவிட்டது“ என்று ஆச்சரியத்துடன் கூறினாள். அவள் தரிசனத்தை கூறி முடிக்கும் தருவாயில், கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அவள் பார்த்தபோது, சகோ. பிரான்ஹாம் அப்பொழுது தான் உள்ளே வந்து கொண்டிருந்தார். அவர் கதவைத் தட்டவில்லை. அவர் கதவுக்குள் பிரவேசித்து உள்ளே வந்தார். தாயார் ஏறக்குறைய மயக்கமுற்று நாற்காலியில் சாய்ந்தாள். சகோ.பிரான்ஹாம் படுக்கையினருகில் நடந்து சென்று ஜார்ஜியாவிடம், “சகோதரியே, தைரியமாயிரு. நீ சேவித்து,

சிநேகித்து, உன் ஜெபத்தை ஏறெடுத்த இயேசுகிறிஸ்து உன் விண்ணப்பத்துக்குச் செவி கொடுத்து ஒரு தரிசனத்தின் மூலம் என்னை இங்கு அனுப்பியுள்ளார். எழுந்து நில், அவர் உன்னை சுகமாக்கிவிட்டார்’ என்றார்.

67. சகோ. பிரான்ஹாம் அவள் கையைப் பிடித்து தூக்கி விட்டார். அவள் அநேக ஆண்டுகளாக படுக்கையை விட்டு எழுந்திருக்கவேயில்லை என்பதை நினைவில் கொள்ளவும். அவள் உடல் முழுவதும் புண் இருந்ததால், அவளுக்கு அடியில் ஒரு

துப்பட்டியை அவர்களால் விரிக்க இயலவில்லை. அவளுடைய தலை ஏறத்தாழ ஒரு சதுரத்தைப் போல் காணப்பட்டது. அவளுடைய கண்கள் ஆழமாக குழி விழுந்திருந்தன. அவளுடைய கைகள் துடைப்பக் குச்சியைப் போல் இருந்தது. ஆனால் சகோ. பிரான்ஹாம் இயேசு அவளை சுகமாக்கினார் என்று கூறின் மாத்திரத்தில், அவள் எழுந்து காலூன்றி நின்றாள். அவளுடைய மகள் ஒன்பது ஆண்டுகள் கழித்து முதன் முறையாக, எந்த மனிதனையும் தாங்காமல், தன் சொந்த பலத்தினால் அல்ல,

பரிசுத்த ஆவியின் பலத்தினால் தரையில் நடப்பதைக் கண்ட தாயார் அலறினாள். சகோ. பிரான்ஹாம் கட்டிடத்தை விட்டு வெளியே செல்லப் புறப்பட்டபோது, அவளுடைய சகோதரி ஓடி வந்து, அவளும் அலறத் தொடங்கினாள்.

பிறகு, அவளுடைய தந்தை வீட்டுக்கு வந்த போது, அவருடைய மகள் பியானோவின் அருகில் உட்கார்ந்து கொண்டு இசைப்பதைக் கண்டு ஏறக்குறைய மயக்கமடைந்தார். அவர் மலைக்கு கீழேயுள்ள நகரத்துக்குச் சென்று அங்கிருந்த மக்களிடம் நடந்ததைக்

கூறினார். அந்தப் பெண் கொல்லைப்புறத்துக்குச் சென்று புல்தரையில் உட்கார்ந்து கொண்டு புற்களையும் இலைகளையும் ஆசீர்வதிக்கத் தொடங்கினாள். அவள், "ஓ தேவனே, எனக்கு நீர் எவ்வளவு நல்லவராக இருக்கிறீர்" என்று கூறி ஆனந்தமடைந்தாள்.

அன்றிரவு ஆலயம் ஜனங்களால் நிரம்பி வழிந்தது. ஞாயிற்றுக்கிழமை வந்தபோது, அவர்களுக்கு மற்றுமொரு ஞானஸ்நானம் ஆராதனை இருந்தது. அப்பொழுது ஜார்ஜியாவும் அந்த நேல்

பெண்ணும் பாட்டம் ஃபோர்டு என்னுமிடத்தில் ஞானஸ்நானம் பெற்றனர். தற்பொழுது ஜார்ஜியா மில்டவுன் பாப்டிஸ்டு ஆலயத்தில் பியானோ இசைத்து வருகிறாள். அவள் பூரண சுகமுள்ளவளாய் இருக்கிறாள்.

★★★★★

**நான் சேவை செய்யாவிடில் அவர் என்னை நரகத்திற்கு அனுப்பிவிடுவாரோ என்றெண்ணி நான் கர்த்தருக்கு சேவை செய்வதில்லை; நான் அவரை நேசிப்பதால் அவருக்கு சேவை செய்கிறேன். எனக்குள் ஏதோ ஒன்று இருப்பதால் தான் நான் அவருக்கு சேவை செய்கிறேன்.**

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

செய்தி: 59-06-28E **கேள்விகளும் பதில்களும்** COD #10

---







Only believe,
Only believe
All things are
possible,
Only believe.


நாடுகள் உடைகின்றன
இஸ்ரவேல் விழித்தெழும்புகின்றது
தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்கள் இவை
புறஜாதிகளின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன.
திகில் அவர்களை சூழ்ந்துள்ளது.
மீட்பின் நாள் சமீபமாயுள்ளது
மனிதரின் இருதயங்கள் பயத்தினால் சோர்ந்து போயுள்ளன
பரிசுத்த ஆவியால் நிறையப்பட்டு
உங்கள் விளக்குகளின் திரியை சுத்திகரியுங்கள்
உங்கள் மீட்பு சமீபமாயுள்ளது,
தலையுயர்த்தி நோக்குவீர்

**Only believe,**
**Only believe**
**All things are possible,**
**Only believe.**



சகோ. பினேகாஸ்

போன்: 8838623242,
9551855108

Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in